சாற்றுக்கவிகள்.

பெரி... தாலூகா ... ஸமஸ்தான வித்வான்
ம-ா-ா-ஸ்ரீ, செல்லையபாரவர்களென்ற வேங்கடநரஸிம்மையரவர்கள்
இயற்றியது.

...ற்கண்டாங்கனதனஞ்சொற்கன்னிவள்ளிதெய்வானைகணவன்பன்னீர்
...ற்கண்டாங்கியபழனிநாதன்மிசைப்பாமாலைநவின்றான்பானேர்
...பாற்... டாங்கியைப்புணையுமபூவைகலைமகள்கருணைபூத்துப்பன்னூற்
...சாற்கண்டாங்கிலமெலாந்துதிபழனிச்சாமியெனுந்தூயோன்றானே.

...ந்த...டை மதுரகவி ம-ா-ா-ஸ்ரீ, ஸ்ரீநிவாஸையங்கா ரவர்கள்
இயற்றியவை.

...யவிற்றிகழ்கருங்கட்செம்பவளவாய்மதுரச்செப்பினார்தம்
...க்கயனாகேந்திரர்வாழ்நீணிலத்துமிலையெனவின்னிலஞ்சொனேர்மை
...யஞ்சேர்பொழின்மதுரமன்னுவளஞ்செறியதிகமகிமைவாய்ந்த
பன்மாநகர்ப்பெருமைமானவராலெடுத்துவமைவகுக்கற்பாற்றே. 1

...ன திருத்தலமுறையுமெழில்விசுவகுலத்துதித்தவிசையான்வண்மைக்
...ன்னக்கைமாறுகருதாதுவிதிக்குவைகள்கனிந்தன்பூற
...லஞ்சேர்கவிவாணர்நலம்பெருகவளித்தருளுநன்மைமிக்கோன்
...ரியபுகழ்மருவும்பிச்சாண்டிமகிபாலன்பாலன்மன்றே. 2

...கணநூலிலக்கியநூலெளிதினுணர்ந்திதயமலரிலங்கநாளுஞ்
...லத்தகுஞ்சீர்நன்னூலின்றுணிபொருங்குநனியறியுஞ்சுகுணன்வண்மை
...கக்கண்ணியாய்வளர்பழனிச்சாமியெனநாவலர்கள்ஜயங்கொண்டேத்து
நலக்கூரியதாடாளன்னனெறிவாய்முன்னியவைநடத்துநல்லோன். 3

இத்தகையவுத்தமன்மெய்ப்பொருட்குமுதலாயவிறைவற்கேய்ந்த
சுத்த...ராமயசொரூபன்றுறைமுனிவர்கருத்தமையுஞ்சோதியென்னும்
வித்தகஞ்சேர்பழனிமலைவேன்முருகன்றிருவடிமேல்விழைந்துவண்ணப்
பத்தியுறும்பாமாலைப்பணிந்துரைத்தானிதன்பயனைப்பாரீர்பாரீர். 4

சாற்றுகவிகள்.

மேற்படி ஸ்ரீநிவாசையங்காரவர்கள் சகோதரர், வித்வான்
ம-ா-ா-ஸ்ரீ, கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்க
ளியற்றியது.

மன்னப்பாமாலையணிமாதவனேய்செள்ளமுஞ்சேய்
வன்னப்பாமாலைவழுத்தினனால்—நன்னர்ப்பா
தென்பழனிச்சாமிதிருத்தாமரையடிக்கு
மன்பழனிச்சாமிதுரைமால்

சேற்றூர் ஸமஸ்தானவித்வான்
ம-ா-ா-ஸ்ரீ, இராமகிருஷ்ணகவிராயரவர்க
ளியற்றியது.

பூமாலைக்கனங்குழலார்தெய்வானைவள்ளியென்றிருபேர்போற்றத்தக்க
தேமாலைக்கரும்பிரசமொழிமடவார்முலைஞெமுங்கச்சேர்ந்தசென்னு[illegible].
காமாலைக்கண்டவுடனீறில்லாத்துணையெனவேகழலுங்கந்தப்
பாமாலைக்கவியணியென்றனன்பழனிச்சாமியெனும்பாவலோனே.

இரசக்கநாயக்கனூர் ஸமஸ்தானவித்வான் ஆனைமல்லையகவுண்ட[illegible]ன்
பட்டி ம-ா-ா-ஸ்ரீ பொன்னம்பலக்கவிராயரவர்க
ளியற்றியது.

மருப்பழனந்திகழ்வளஞ்சேர்மார்க்கயன்கோட்டைப்பதிவாழ்மு[illegible]யென்
செம்பொற், பொருப்பழகுபடைத்தமுலைப்பூவையருக்கோர்மதனன்போ[illegible]ல
வந்தோன், தருப்பழகுக்கொடைக்கரத்தானெனும்பழனிச்சாமிவள்ள[illegible]தமி
ழோர்மெச்சத், திருப்பழனிமாலைசொன்னான்றன்னைமக்கடவுளின்மேற்[illegible]ப
பாய்த்தானே.

எட்டிச்சேரியிலிருந்து ஆனைமல்லையகவுண்டன்பட்டியில் வந்
திருக்கும் சிவகிரி ஸமஸ்தானவித்வான் ம-ா-ா-ஸ்ரீ திருமலைவேலுக்
கவிராயரவர்களியற்றியவை.

பொன்னுலகத்துறுகடவுட்போதகமுந்தேனுவுமெய்போதுநெஞ்சின்,
மன்னுமவர்வொடுநுகர்ந்துபெருமகிழ்ச்சியுறவதிகமணஞ்சேர்சரவிற், றுன்
னுமலரூற்றுமதுநதிபெருகியோடிவயற்சேறும்பாய்ந்து, கன்னலுஞ்செந்நெ
லும்வளர்மார்க்கயன்கோட்டையெனும்பதிவாழ்கருணைப்பூமான். 1

பருத்தபுயத்திடமலையான்பலகலையாந்திடமலையான்பழகுந்தூய
திருத்தமிழாகரவிசையான்சிந்தைதனிற்கரவிசையான்தெளிந்தோர்பாடும்
பொருத்தமுறுகவித்தாரன்பொற்புனைதுங்கவித்தாரன்புலவர்க்கீயு
மருத்தகுதானைக்கையான்மறந்துமுந்தானைக்கையான்வாய்மைமிக்கான். 2

புத்தமுதவசனமுறும்புலவர்களனைக்குமுதலாற்புவியில்யாருஞ்
சித்தமகிழ்வொடுகீர்த்தியாகபதியெனவுரைக்கத்திகழும்பண்பா
னித்தமுஞ்சம்பத்தைக்கைமேனாளுந்தலைவனிந்திரனேசர்பிச்சாண்டி
உத்தமனவான்புரிதவத்தாற்புத்திரசிகாமணியாயுலகில்வந்தோன். 3

அரும்பாரதம்பாகவதமிராமாயணமுன்னூற்சொல்லும்
பெரும்பாரகாவியமெலாமுணர்ந்துதெரிந்துயர்கப்பிறங்கும்வண்டு
விரும்பாரமணிமகுடக்காவலரும்பாவலருநம்மெச்சக்கண்டு
கரும்பாரமுதமெனவேவருவராசரஞ்சிதப்பிரசங்கஞ்செய்நாவான். 4

மாகனகத்திருத்திரனோர்மன்கரவேலையனைவிழியொளவனமன்னோர்பார்த்
தேகனகத்திருத்துக்கலைத்தனங்களைத்துமையுற்றுச்சேரவெண்ணும்
வாகனகத்திருத்தியொடுமென்னபுகழ்விசுவகுலமணியன்னோன்பொற்
கோகனகத்திருத்தினமுஞ்சோபழநிச்சாமியெனக்கூறும்வல்லோன். 5

தொண்டதண்டாபரிந்துதொழுந்துணைப்பதத்தான்விடங்கடலிற்றோன்றிச்சிறப், பண்டதண்டவதனைமகிழ்ந்துண்டவன்சேர்தேவிமுலைப்பால் விரும்பி, யுண்டதண்டபாணியெனுந்தென்பழநிவேலவனுக்குயர்பேரின்பங், கொண்டதண்டமிழ்க்கவிமாலையைப்புனைந்துபெரும்புகழைக்கொண்டான்மாதோ. 6

முன்பமரர்கடைந்தெடுத்தவமுதநாவினுக்கினிக்குமுதன்மைசேர்மெய்த்
தென்பழநிச்சாமிமலையென்பழநிச்சாமிவெகுசிறப்பாயுள்ளத்
தன்புபெறப்பாடியவித்திருப்பழநிமாலையெனுமமுதங்கற்றோ
ரின்பமுறுசெவிக்கினிக்குமனக்கினிக்குநாவினுக்குமினிக்குந்தானே. 7

கோயம்பைநகரம் ம-ள-ள-ஸ்ரீ கன்னப்ப கவுண்டரவர்கள் குமாரர்
வித்வான் ம-ள-ள-ஸ்ரீ திருமலைசக்கையகவுண்டரவர்க
ளியற்றியது.

கோகனகமலைசெறிபூந்தடமலிமார்க்கையன்
கோட்டைவளம்பதிவாசன்விஸ்வகுலேசகவிக்
கோகனகமலைகர்திண்புயபழநிச்சாமிக்
குணநிதிமீக்கூரன்பானற்கலைதற்பணநேர்

கோகனகமலைமருகனும்பழனிவேண்மேற்
கூறுநற்செஞ்சொன்மாலைதீஞ்சுவையின்முதிர்க்
கோகனகமலைவாரியமுதமோவிதையுட்
கொள்ளுநர்தம்வெம்மாலையம்மாலைசெறுமே.


[illegible] வித்வான்
ம-ள-ள-ஸ்ரீ, பொன்னையாபிள்ளையென்னும் எஸ். தே. அருணாசலப்பிள்ளை
யவர்கள் இயற்றியது.

நாரதந்தாங்கும்பொழில்சூழ்நற்பழனாதனின்மேனன்னால்வேதச
சாரதந்தாக்கணங்குதிரிதமிழ்வளர்மார்க்கயன்கோட்டைத்தனதனென்னும்
வாரதந்தாவுறுநகிலார்மதன்பழனிச்சாமிவள்ளல்வழுத்தும்மாலைப்
பாரதந்தானெனப்புகழ்ந்துபாவலர்கடிக்கவசிறப்பதிப்பித்தானே.

உ

ஓம்

ஸு[illegible]மண்யாய நம:



திருப்பழநிமாலை.

வழிபடுங்கடவுள் [illegible]

வெண்பா.

கா[illegible]பழநிக்[illegible]

[illegible]மாலைசெப்புதற்கு—[illegible]

செம்பவளச்சயபவள[illegible]ன்னி[illegible]

கம்பவளத்தும்பியிணைக்[illegible]

[illegible]ரகத்து வணக்கம்.

செந்தூர்முருகன்றிருமான்மகிழ்மருகன்

சந்தார்புயசயிலன்றன்பதியா—நந்தார்வண்

மாவடியாரும்பழநிமாலைசொலவாலையுமை

சேவடியாருந்துணைவந்தே.

நூல்.

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியப்பா.

சீருலவியபன்னிருவிழிக்கருணை திகழ்செழுங்கமலமாமுகமும்

ஏருலவியமாமோலியும்வேரியிந்துளங்குரவெனும்பைம்பூந்

தாருலவியதோட்சயிலமுமிறைஞ்சத்தரிசனமெனக்குவந்தருள்வாய்

காருலவியவான்புரிசைசூழ்பழநிக்கந்தனேவள்ளிகாதலனே. (1)

கந்தனையவுணக்கடல்குடித்திடுவேற்கானையையடியவர்கருதும்
சிந்தனைப்படியேசேவைதந்தருளுந்தேவனைச்செறிகருமாயைப்
பந்தனைகடந்தபண்பனைப்பழநிப்பதியமர்சிவகுருபரனை
வந்தனைபுரிதிநந்தனைதவிர்பாமாலிகைசூட்டியென்மனனே. (2)

கோலமார்செழியகுவளைநாண்மலர்வாய்க்குதட்டிவெம்பகட்டினம்திப்பச்
சாலநெக்குருகிவயிறுளைந்தலறிக்கலந்தலர்ந்திரங்கினமுயிர்த்த
வாலொளிவிரிவண்டரளமொண்குப்பைமலிவாவியெழில்காட்டுஞ்
சீலநீண்மருதவேலிசூழ்பழநித்தலத்தமர்மேயபெம்மானே. (3)

புண்ணியப்பயிர்க்குக்களையெனத்தகுசனனமுயல்பொருந்தடையவனைப்பொடி
கண்ணியச்செந்திற்கடிநகர்க்குருபரனைமுமாரணிகனியமரனே சது
அண்ணியங்குறையுமறுவாயெற்றிடவேவாய்மருவானந்தனையருளி
விண்ணிறைசுதையைமகிழ்வொடுமணந்தசெவ்வேற்பழநிமலவனே (4)

பாலைநேர்கருஞ்சொலுழத்தியர்மருதப்பண்ணினிற்றினைக்கிடநயந்து
சோலைவாய்க்கரியகுயிலினமிசிறப்பக்கலைவனக்கலைமலாங்கனிக்கு
மாலவாயதனிலரன்மொழிப்படியேயணிசெம்பூவணிகடைமகவாய்ச்
சீலமார்சங்கப்புலவர்தங்களைநீத்தபூம்பழநியெந்தேவே (5)

எண்ணிலாவவுணர்டர்க்கடலகடந்திங்கெழுவாங்கவேயெனத்தேறி
யுண்ணிலாமுவகைத்தடங்கடல்படிந்திட்டிம்பர்நடுநிற்கிடவுயர்த்திம்
பண்ணுலாமழலைக்குழவியாயணிநீள்வைகுந்தராமைனத்தடத்துதித்த
தண்ணிலாத்தவழத்தருபொழிற்பழநித்தனில்வாழ்தருமறைப்பொருளே (6)

பொன்னெடுங்கிரியின்மன்னியசிகரப்பாரைமுதும்மாழியாநகரம்
நன்னலம்புனையச்சைவமேன்மேலாங்கநல்லவர்பரவுசம்பந்த
ரென்னவந்தந்நாளிழிகுணச்சமணரெண்ணிலாகழுவுறவியற்றித்
தென்னவன்சுரங்கடெறுழித்தபாலணியதெய்வதப்பழநியார்த்தேவே. (7)

பொற்புறுபொதியவெற்புறுமுனிவன்புகழமூன்றுலகமும்பொருவில்
விற்பனஞைகவற்புதஞானம்விளியமோனதேசிகனே
அற்பகல்வருத்தும்பற்பலதுயரமகற்றிநற்சுகமெனக்கருள்வாய்
சிற்பரையுதவுதற்பராபழநிச்சின்மயானந்தமெய்ப்பொருளே. (8)

புகழ்கெழுவிபுதர்பதியினையறியப்புகுவதோவெனவுயரருணைச்
சிகரிமீதிவர்ந்துவிழுந்திடமுயன்றசேயனைத்தூயநற்றமிழா
லகமகிழ்ந்தலங்கலெருடுத்துநந்தடந்தோட்கணுதினமணிதியென்றருளித்
தகவுடன்றடுத்தாட்கொண்டதாயகனேதண்பனைப்பழநிநாயகனே. (9)

குருக்கிளர்மணிகள்குயிற்றுதேர்களிறுகொய்யுளையாணனிகுழுமத்
தருக்குடனெதிர்த்ததாருகன்முதலானோரானவரெவரையுந்தாக்கிச்
செருக்களத்தமரர்புகழ்தரவடிவேல்செலுத்தியுதடிந்தசேவகனே
மருக்கமழ்கடப்பமாலையந்தடந்தோள்வள்ளலேபழநிவாழ்மணியே. (10)

அயிலெயிற்றனந்தன்படநெளிக்கத்துங்கவண்ணலங்கனகவெற்பதிர
வெயின்முடியசுரர்வெருக்கொளப்புவிசூழ்வேலைநீர்சிதறவிண்ணசையப்
பயினலமொழியார்ச்சிறையடித்தினியபரதஞ்செய்மரகதக்கலப
மயில்வயப்பரிமீதுலகொருநொடியில்வலம்வருபழநிவாழ்மருந்தே. (11)

சூழிமால்வரையன்றலைக்கிடவசுரன்முன்சுரிவளைநெருட்டுவெண்டிரைப்பா
லாழிநீத்தடையாவருந்துயரகற்றியருளியவரிதிருமருகா
வீழிவாய்வடுக்கட்குறமகள்கொம்மைவெம்முலைக்குவடுறச்சிவந்த
பாழியந்தடந்தோட்பண்ணவபழநிப்பதியமர்பழமறைப்பொருளே. (12)

கத்துநன்முரசக்கடைத்தலையமர்சூழ்நகர்கட்செவிமலிகா
டித்தரணியில்வாழுயிரெலாம்புரிந்துமறையவனெனுமுனதியல்பு
வித்தகமறையுமுணர்ந்திலமென்கவியென்விளையாட்டதகுவதோவிரைப்பூங்
கொத்தலரலங்கன்மொழியாப்பழநிக்குரிசிலேபரசிவக்கொழுந்தே. (13)

கொண்டலைக்கிழித்துவிண்டலத்துயர்ந்தகூன்சினைத்தருக்கள்பண்டசுரர்
மண்டமர்க்கடந்துவாழ்வுமக்களித்தவரதசண்முகன்றனைத்தொழவே
யண்டர்காள்வம்மினென்றழைப்பனபோலணியுலாமவண்டலையசைக்குந்
தண்டலையுடுத்தபழநிமாமலைவாழ்சரவணபவசிவகுருவே. (14)

கந்தரக்குழலொண்கலைமதிநுதலார்கயல்விழிப்பசியமென்பணைத்தோட்
சந்தணிகுவவுங்கொங்கைநுண்மருங்குற்றையலார்மையலாரெனதுள்
ளிந்தையையகற்றிநின்றனைப்புரிவாய்சத்துலமெறியும்வெண்டரங்கச்
சிந்துவொன்றியசீர்ச்செந்தின்மாநகர்வாழ்செம்மலேபழநியூர்த்தேனே. (15)

நேமமோடுனதுநாமமாமமுதைநினைவினுலுட்கொளுமவர்தங்
காமமேமுதலாமறுபகைசெங்கேழ்க்கதிரெதிர்கச்சளங்கடுப்பப்
போமெனமறைநூலாகமந்தொகுதிபுகறலையறிந்துசிற்றறியாப்
பாமரனெனினுமென்னையாள்பழநிப்பண்ணவபரமதேசிகனே. (16)

செஞ்சொலாரணமும்விஞ்சையர்முனிவர்தேவருமனுதினஞ்செபிக்கு
மஞ்செழுத்தாதியரும்பொருடெரியாதலமருமஞ்சநல்லூர்திக்
கஞ்சனைமுன்னாள்வெஞ்சிறைப்படுத்துங்கத்தனின்கழலணிகழலே
தஞ்செனவடைந்தேனஞ்சலென்றருள்வாய்சாமியேபழநியார்தனமே. (17)

அரும்புமென்மலர்களாய்ந்தெடுத்துனையேயருச்சனைபுரிந்துனதருளை
விரும்புநல்லடியரேவலின்றிறனைவிழைந்திலேன்பவஞ்செயவிரைந்தேன்
இரும்புநேர்கடினநெஞ்சினேனெனினுமிணைப்பதப்பணியருள்பழநி
வரும்புராதனசுந்தரசுபகரபாவனகனகபகுணவாழ்வே. (18)

மங்கையரியலைப்பொங்கமைப்புகன்றமயலினைவளர்த்திடுமசுரா
லெங்குளததுவெனங்கைசேர்தருவதென்றகொலெனநினைந்தந்தோ
சங்கைகெட்டுலகிலலைந்தவெஞ்சழக்கன்றன்னையாட்கொள்ளுநாளுளதோ
கங்கையிற்கயிலைக்கண்ணுதலளித்தகந்தனேபழநிவாழ்கனியே. (19)

இருவினைகளைந்தமும்மலமகற்றியைந்தநாற்கரணமுமொன்றத்
திருகுருதைந்திந்திரியமுமடக்கிச்செம்மணிற்றதிநதிடுதிறனை
திருவுளமிரங்கியடியனேற்குதவிச்செவ்விநின்றொண்டருள்புரிவாய்
குருபராவடிவேற்கொற்றவாகுமராசோதிலாப்பழநிவாழ்குகனே. (20)

என்னிருவிழிகளுன்னருளுருவினெழிலைநோக்குறவினைசெவிகண்
மன்னுநின்புகழைமடுத்திடச்சிரந்தாமரைமலர்ப்பதந்தொழத்தினமும்
நன்னயக்கவிகளியற்றிநின்றுதிக்கநாநலமுறவரமருளவாய்
பன்னலங்கனிந்தசெந்நெலங்கழனிப்பழநியம்பதிவளாபரனே. (21)

புவியகத்தறிஞர்புனிதமெய்யறிவாற்புகன்றநன்னூற்பொருள்சிறிதுஞ்
செவியகத்தேற்றல்செய்திடாக்கொடியசிறியனைத்திருத்தியாண்டிடுவாய்
அவியகப்புகைவிண்ணெனப்பொலிநலங்கூரருணைமாமுனிவரனறையுங்
கவியகமகிழக்கேட்டருள்புரிந்தகந்தனேபழநியங்கதிரே (22)

முன்னமெத்தனையோபுனிதர்நிற்றொழுதுன்முழுவலன்படைந்துயர்ந்தனர்
னென்னவிவ்வுலகமியம்பிடுமையாவேழையாமென்னைமாத்திரமே க
யன்னியனெனக்கைவிடலுனக்கழகோவருட்பெருங்கடலுனையல்லாற்
பின்னரிங்கெனக்காருறுதுணைபழநிப்பெரும்பதியமர்ந்தபெம்மானே. (23)

பல்கதிர்ப்பரிதிபைம்பரியயர்வுபாற்றியவுயர்பொழிற்பழநிச்
செல்வநற்புகழ்சேர்பரங்கிரியதனிற்றிகழ்செழுஞ்சரவணபவநின்
அல்லியங்கமலபதத்துணைச்சிரமீதணிந்துபோற்றிடுமடியனுக்குக்
கல்வியுந்திருவுங்கனமகப்பேறுங்கதித்திடவருள்வதுன்கடனே. 24)

மகரமாக்கடல்வங்கத்துறுகொடியுமறியலைத்துரும்பருமானச்
சகமெனுமாயைப்பிணியொடுஞ்சுழன்றுதளர்மனச்சஞ்சலந்தவிர்த்து
நிகரிலாநினதுபதயுகமறவாநேயமவஞ்சகமிலாநிலைமை
நேர்மொழிச்சரதமருளுவாய்பழநிப்பண்ணவாவிண்ணவர்பதியே. (25)

ஆறுமாமுகனீயுறைந்திடவுகந்தவாறுபூந்திருத்தலமணுகி
ஆறுநல்லெழுத்துநெஞ்சுறவன்பினொடுநின்றேதுதியறைந்தோர்
ஆறுதொன்மலங்களகற்றினையெனக்கவ்வாறுனதருளினையளிப்பாய்
ஆறுமம்புலியுமேறுசெஞ்சடையானருளியபழநியாரமுதே. (26)

ஆதியேயருளேயமைபெரும்பொருளேயணிபுகழ்ப்பழநியங்கிரிவாழ்
நீதியேநிறையேநிறைகலைக்கடலேநிகழ்சுபநிமலநித்தியமே
தீதிலாவிரதந்திகழ்ந்தமாதவனெச்செழுந்தவர்தொழுந்திருவுருவே
சோதியேசுடரேசுத்தசித்தாந்தந்துலங்குமெய்ச்சுருதிநாயகனே. (27)

ஆரணவடிவாயவைகளின்முடிவாயநுலிதவகண்டமாயணுவாய்
நாரணனயன்மாநாகவேந்தளித்தநங்கையோர்பங்குறைசிவமாய்க்
காரணநிதியாய்க்கதிதருபதியாய்க்காமருபழநியங்கிரிவாழ்
பூரணவிமலாபுகழ்வரபுனிதாபொருவிலாறக்கரப்பொருளே. (28)

அன்பர்கள்பிறவித்துன்பிணியெய்தாகலுவானருந்துமாமருந்தே
முன்புநற்கீரககவிக்குறுமரந்தைமுழுவதுநீக்கியமுதலே
என்பழவினையின்வன்பினைத்தவிர்த்தேயின்னருள்புரிந்துகாத்திடுவாய்
தென்பழநியினல்லின்பமோடுறைந்தசெல்வமேதெண்டபாணியனே. (29)

பூதலந்தனிலேநஞ்சிறார்புகன்றபுன்மொழியணிசெவிபுகலும், ஆதரம்பெருகவகமகிழ்ந்திடுவரன்னைதந்தையர்களிங்கதுபோற், பேதையேன்பிதற்றும்புன்சொலின்பிழையைப்பெட்பொடும்பொறுத்தருள்புரிவாய், நாதனேகமலபாதனேயயலார்கலங்கெழுபழநிநாவலனே. (30)

கட்டளைக்கலித்துறை.

கரவணமேவழமழைக்கவந்தோனுங்கரியவனும்
பரவணவாசைமருகோனடியர்பவமகற்று
முரவணலாயவுருவன்வனமயிலூரொருவன்
சரவணசம்பவன்றாட்டாமரைகள்சரணங்களே.

[கரியவன் = இந்திரன்.]

திருப்பழநிமாலை முற்றிற்று.

உ

கடவுள் துணை.

ஆசிரியம்.

தடஜடிலமுடியதனிலிதழிமதிபுனையுமொருதனிமுதலளித்தமுதலே
சங்க்ராமவேலவசகோதரமகோதராசாரந்தமுடிகவாகனு
விடமனையகடலசுரர்படையினெடுவேழமுசவெனுசூரனைத்தடிந்து
மேனுளரிக்கணிகொள்வாணுடனித்தரசின்மேலாகவைத்தபொருளே
படவரவின்மகுடநிறைதருபுடவியுறுநராபண்ணவரொடுநாகரிவர்தம்
பரிபவமகற்றியெப்பரிசுமுற்றிடவரமபாலிக்குமோனநிதியே
கடகரடவிகடவைங்கரசூரகயமுகக்கணநாதவேதவடிவே
கருதுபுகழ்பெருகுதமிழறிவுசுகநிதியுதவுகருணைநிதிதெய்வமே.

கீர்த்தனைகள்.

விநாயகஸ்தோத்ரம்.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

கருணையுடனுபய சரணகமலநய
கதியருள்தாதா கணநாதா (கருணை)

அநுபல்லவி.

தருணமெஞ்ஞான சரிதாபாணா
சகலவிக்னவிநா சனமயவனு (கருணை)

சரணங்கள்.

லம்போதரகர நாகவதனகர
நயனசுபகர லயவீரா
அம்பாவரசுதா அமரகணசேவிதா
அதுலசுகுணதா யகவாதா (கருணை)
பரமகர்த்தசுமுக பரதநர்த்தனசுக
பாவனரூபா பரதீபா
தருமவரபழநி ஸ்வாமிசோதரயுக
சாமரகர்ணா சசிவர்ணா (கருணை)

---

(2) சிவஸ்தோத்ரம்.

இராகம்-தேசிககமாஸ்-தாளம்-சாப்பு.

பல்லவி.

சங்கரவரதயாகரா — தாணுமேவஹரா
சங்கரவரதயாகரா

அநுபல்லவி.

பொங்கரவகங்காதரா — புராதனசுகங்காதரா
துங்கமழுச் செங்கையாதரா — சுவேதபூதரா (சங்கர)

சரணங்கள்.

வேதவிரதாபோதனு — விற்பனுகாமருதனு
நாதரூபா நிதமோகனு — நந்திவாகனு (சங்கர)
சுந்தர விஜயசுர — வந்திதகமலபதா
மந்திரசுயம்புவேசிதா — மாம்பாஹிசதா (சங்கர)
சரணுகதப்பழநி — ஸ்வாமியிதயாகரா
ஸ்யாமளையு மாமனோகரா — சந்திரசேகரா (சங்கர)

---

(3) ஸ்ரீ காமாட்சியம்பிகை ஸ்தோத்ரம்.

இராகம்-பீல்-தாளம்-ஆதி.

பல்லவி.

சரதசுகுணம்குும — அறிவுந்தியினைய
சகிதசுகிர்தநலம் — தா அம்மா நய (சரத

அநுபல்லவி.

விரதகருணுகரி — விமலமனேகரி
விகிதகுணசாகரி — யுபகாரி
வீரியுசிதகவு — மாரிராஜேஸ்வரி
வேதவித்யாதரி — யே நமோநமோ (சரத

சரணங்கள்.

கதியருள்சூட்சி — கமலதளாட்சி
கருதுதேவசாட்சி — காமாட்சி
மதிதவழ்வேணி — மருவுகல்யாணி
மவுனபுராணி — மலர்வாணி (சரத

கீர்த்தனைகள்.

சீலிகபாலி	திவ்யகுணாலி
சிற்பரலோலி	திரிசூலி
சீதமதிவதனி	நீதாப்ரதனி
சேஷபூஷணிமஹா	தேவிந்த்ரோதய (சாந்த)
தாட்சாயணிபழநி	ஸ்வாமிபூஜிதசுப
தரநயவரதபங்	கபசரணி
ஸ்யாமளரூபி	சபாப்ரதாபி
சர்வஜீவரட்சக	ஜகத்பாதய (சாந்த)

---

(4) கண்ணபிரான் ஸ்தோத்ரம்.

இராகம்-சாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

செந்திருமடந்தைததழு வுந்தபாகரமுகுந்த
சுந்தரகோவிந்தனேநீ வந்தருள்செய்வாய் (செந்தி)

அநுபல்லவி.

சந்ததமுமுந்தனிரு கந்தவைரவிந்தபதம்
சிந்தையில்நினைந்ததிக வந்தனைசெயுமெந்தன்முன் (செ)

சரணங்கள்.

துங்காமறைபுகழ ரங்காவுன்னெஞ்சமதி
ரங்காவகையதுவொ பூங்காவிதிவலியால்
வெங்கானகஞ்செலவர் பங்காயிருந்தநர
சிங்காநீயன்றியெனக் கிங்காரநறுங்கமலச் (செந்)

அண்டபகிரண்டமுட னெண்டரும்பலபுவன
முண்டுடனுமிழ்ந்தநறுந் தண்டுளவணிபரனே
கண்டகர்செகுத்திடுங்கோ தண்டபாணியனேயுனை
யண்டெளியன்றெண்டதனைக் கண்டடிமைகொண்டிடவே ()

வாமனேபரமபத நேமனேகனசுகிர்த
பூமனேபோற்றுமாயிர நாமனேஜெயசுந்தரக்
காமனைப்பயின்றபரந் தாமனேராமனேயெனப்
பூமியிற்றொழும்பழகிச் சாமியின்றுதிக்கிரங்கி ()

---

(5) உத்தமபாளையமென்னுந் திருநகரெழுந்தருளிய ஸ்ரீகாளாத்தீஸ்வரர் ஸ்தோத்ரம்.

இராகம்-உசேனி-தாளம்-ரூபகம்.

காத்தருளையா காளாத்தீஸ்வரனே
காத்தருளையா

அநுபல்லவி.

சேர்த்தவினைகள் தீர்த்தாவலுதனை நீ (காத்த)

சரணங்கள்.

பித்தா தன்மையுடன் பிறையமர் முடியோனே
பிரமன்மால்தனக்கெட்டாப் பெருமானே
உத்தமநகரான செங்குமாகழூரானே
உன்னையன்றி யெவருமில்லை பொருள்தானேனே (காத்)
ஆகமமாமறை நாடும் சகிதமந்த்ரபூரணா
சங்கராபிரசன்னசம பிரமகாரணா
பொங்கமானப்பூரணா புனிதாமித பாவகனா
அங்கஜனைக்காய்ந்தோ அம்பிகைரமணா (காத்த)
காலகாலனேஸ்ரீகாந்த காமதகனநேத்ரா
கமலாசனப்ரமதா பாலபாத்ரா
ஆலஹாலகண்டா சாலநீலகந்தரா
அகிலரக்ஷகனே அனந்தகீர்த்திதரா (காத்த)
எந்தாயுமப்பாவும் தந்தாளனைச் சந்ததம்
என்றும் தொழுமெனையே நிலமேறைகதம்
சிந்தாகுலந்தவிர வந்தருள்வாய்சுகமே
சேயன்பழனிச்சாமி தேடுங்கற்பகமே (காத்த)

---

(6) ஞானாம்பிகை ஸ்தோத்ரம்.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

நம்பினேனம்மா ஞானாம்பா
நம்பினேனம்மா.

அநுபல்லவி.

உம்பருலகத்தைதிக ருத்தமநகர்க்கரசி (நம்பி)

சரணங்கள்.

மங்களவேணி மதுரபுராணி
மவுனசரதநற்கல்யாணி வரபாணி (நம்பி)
வஞ்சகமேதோ நெஞ்சிளகாதோ
வருந்துந்தனையன்மேலில்லாதோ அருளீதோ (நம்பி)
மந்திரப்பெருவாய் மையார்புகழுருவாய்
வரிசைதுலங்கவென்முன் வருவாய் வரந்தருவாய் (நம்பி)
பங்கயன் அரியே பணியுஞ்சுந்தரியே
பழநிச்சாமியிதயாகரியே பராபரியே. (நம்பி)

உ
குமரகுருபரன்றுணை.
ஆசிரியம்.

மங்கலவிழிக்கருணைமடைதிறந்தொழுகுமுழுமதியனையதிருவதனமும்
மகரகுண்டலநீடுசெவியுமறைமொழிவாயும்வாகையின்மிகுத்தவடிவேல்
தங்கபயவரதகரமுங்கனககும்பமுலைதகுவள்ளிதெய்வயானைத்
தாயருடனேயமகிழ்வாயுறையுநின்னருட்டரிசனமெனக்கருளுவாய்
துங்கத்ரிசூலதரிகங்காளிசிவகாமசுந்தரிபயின்றகுமரா
சூரரணிநீறுபடமோறமரினேரில்வருதுரிததிடநடமயூரா
கங்கையணியுங்கடவுளுங்கமலனுமபரவுகானமெஞ்ஞானகுருவே
கந்தமலர்சிந்துபொழின்முந்திவளர்செந்திலுறைகந்தசுவாமிக்கடவுளே.

ஓம்சரஹணபவாயநம:

(7) இராகம்-தேசிககமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வேலவா உனை வேண்டினேன் வரமே - ஜெய
விமலா கமலா சனன்முதலமரா தியர்பணி குமாரா (வேல)

அநுபல்லவி.

சீலனார்படி கோலனார்துடி
செங்கைசேர்தரு சங்கரற்கொரு
மூலமாமறை சாலவேயறை
முருகா சடிநாண் மலரான்
மருகா வடிதா ழெனையாள் (வேலவா)

சரணங்கள்.

சாதுசங்கபா ஜனசுதந்தரா
ஷண்முகஷடா க்ஷரநிரந்தரா
வேதமந்திர கீதசுந்தரா
விதியே கருணா நிதியே
மதியே யருள்வாய் கதியே (வேலவா)
ரந்திபாலக நித்யமங்களா
ரன்னதவீரா வன்னமாயூரா
பந்திபாய்த்துதிக்கும் பழநிஸ்வாமிக்கருள்
பற்றறமோனத்தினிறை
நற்றவர்ஞானத்தினுறை (வேலவா)

---

(௪) இராகம்-காபி-தாளம-ஆதி.

பல்லவி.

ஆதிகுருவானநாதா - அன்பனைக்காத் தாளொணாதா

அநுபல்லவி.

ஜோதியேநீதா துலங்குபொற்பாதா
சுந்தரகனநய சுகுணவிநோதா (ஆதி)

சரணங்கள்.

சாதுவானவர்நெறி எனஞ்சிறிதுமறியேன்
தர்மநெறிமனதிற் சற்றுமேகுறியேன்
ஓதுநின்புகழ்மாட்சி யுணர்ந்திடாதுவெம்பினேன்
உண்மையானதெய்வமென் றுன்னையேநம்பினேன் (ஆதி)
சிந்தைமகிழவரம் தந்திடன்மலையா
ஜெகந்தனிலுனையன்றிக் திக்குண்டோசொலையா
மைந்தன்தனக்கிரங்கா மனங்கனசிலையா
மயிலைநடத்தியிங்கு வரவென்னதொலையா (ஆதி)
சக்திவேலவனைசம் பிரமசுப்ரதீபா
சாம்பசிவசுதமந் தரபுயநீபா
பக்தஜனப்ரியா பவஜனகோபா
பழநிஸ்வாமிதினமும் பகரும்ப்ரதாபா (ஆதி)

---

(9) இராகம்-பியாகடை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஐயனேயன்பர்க் கருளுங் குமரேசனே
ஆதரித் தாண் மெய்யனே (ஐய)

அநுபல்லவி.

தையல்வள்ளிதெய்வானை தழுவுமயூரசயிலா
சந்ததமுமன்பர் வந்தடிதொழுமா
விந்தமலரிற்சிறந்தவறுமுகத் (தைய)

சரணங்கள்.

அருமறைதேடிய அணிகொள்பொற்பாதனே
அடியனேன்பவவினை யகற்றுநன்னீதனே
அரிமுதலியவமர ரொருமகமிக
அஞ்சவெம்பரி வெஞ்சரவெகுளி
னெஞ்சமுருவமுன் வெஞ்சுடர்வேலைவிடுப் (ஐய)

பூமிபுகழுஞ்சிவ காமியருள்வீரனே
புண்யகுருவேசுப்ர மண்யதிடசூரனே
பூவலமொடிதனிற றவுமாயூரனே
புங்கவர்கணிதம துங்கமொடுதுதி
கங்கையணிசடை சங்கரனருளுஞ் (ஐய)

பரமகாருண்யபக்ஷ பதிக்குமரேசனே
பக்தரிதயமலர் பதியுஞ்சர்வேசனே
பரவியசுரமாற்றிப் பழநிச்சாமியைத்தேற்றி
பக்தியுடனனு நித்தமுனைப்பணி
சித்தமதனைநல் லுத்தமனேயருள் (ஐய)

---

(10) இராகம்-கும்பகாம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

சரவணபவசிவ சாமிநாதகுகனே
தாபமகற்றியாள்வாய் ஷண்முகனே. (சர)

அநுபல்லவி.

பா [illegible] துப [illegible] துரு பாரினையென்மீது
பா [illegible] முகபாகியிருப் பதுமெவ்வனகூது
ச [illegible] ணமமை [illegible] க்குகார் சருந்தசலங்கீர்த்தாப
கமிழ்க் [illegible] றமுனிவைபகின் முள்செர்க்காய் (சரவ)

சரணங்கள்

கா [illegible] ளிபுபகதிறு கா [illegible] ணன்பருகா
[illegible] தாமுகன் [illegible] சி [illegible] தணிவிமுருகா
[illegible] க்குகிபி கா [illegible] ணாவேனதாஜ
[illegible] வாபா பூ [illegible] ணாவேனா (சரவ)
[illegible] ந்தகுமயகினேனை வந்தனைசெயுமென்னைக்
கள [illegible] விரிசைநாத நாதுசொன்னேன்
நந்த [illegible] காவி [illegible] ஞதா கவிவலர்புகழ்நீதா
கா [illegible] த்தி [illegible] முள்ள வாகாதா (சரவ)
[illegible] கிப [illegible] முதுமை பாதுகிபவாயனே
[illegible] புதிதால் [illegible] கள் மறலையனே
[illegible] கின்வாமிதிகைபுப பணியுங்குமரையனே
[illegible] வதி [illegible] ணாவடி சேவற்கையனே (சரவ)

---

(11) இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

[illegible] கற்றுனைநீதானே (நம்பி)

அநுபல்லவி.

நான்மறைதொழும்பரம ஞானகுருகோனே (நம்பி)

சரணங்கள்.

தீனரக்ஷக சிற்பரசிங்காரா
செம்பதாம்புயவி சேஷவுபகாரா
தானவபார தளசம்ஹாரா
ஷண்முகதயாபர சடாக்ஷரகெம்பீரா (நம்பி)
வஞ்சமெண்ணிடாதே வன்னமயிலின்மீதே
வருவாய்வரம் தருவாயிப்போதே
தஞ்சமென்றடைந்த தனையன்மேல்வாதா
சங்கரற்குகந்தமறை தந்தகுருநாதா (நம்பி)

மந்திரக்குலை வரையமர்மேலா
வளர்தனக்குற வள்ளிமகிழ்லோலா
சந்ததம்பழநிச் சாமிக்கனுகூலா
தற்பராசவிர்கடம் தயங்குழைடிவேலா (நாரி)

---

(12) இராகம்-இந்துஸ்தானிகாபி-தாளம்-ஆதி.

பல்லவி.

இன்னமிரங்காததேனோ எந்தாயுனக்கிந்தக்கோபமேனோ (இன்)

அநுபல்லவி.

வன்னமாமயூர வாகனனே
மகாபதிகனைத பருமோசனே (இன்)

சரணங்கள்.

எந்தநேரமுமெனது சிந்தைதனிலேயுறையும
கந்தமார்பதாம்புயனே மந்திரவிநோதயனே (இன்)
விண்ணவர்புகழ்ப்பாலகா விமலைதன்முருகா
நண்ணுமடியேன்மேல்பாலகா கண்ணைவெள்ளியாள்நேயதா ( )
அண்டர்துயர்தீர்த்திடுங்கோ கண்டனெடுமான்மருகா
மண்டமர்கடந்தயிர சண்டவடிவேன்முருகா (இன்)
சாற்றிடும்புகழ்ப்பழநி சாமியேயுன்பாதஞ்சென்னி
ஏற்றியேதொழுதேன்றினம் ஏழைமீதுனதுமனம் (இன்.)

---

(13) இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மயில்வாகனனைப்பணிவாய் மனமே கன
மகிழ்வாகவே யனுதினமுமே (மயில்)

அநுபல்லவி.

அயிலெயிற்றுப் பணியின்மணிமுடி
யதன்மீதமர் பதமோடொளிர்
கதநீள்விக மிதமரகத (மயில்)

சரணங்கள்.

முன்னையடியார்கள் சொன்னமுதுமொழிக் காளாய் - பவ
முற்றுமொழித்திடச் சாற்றுமென்சொல்லையுங் கேளாய்
என்னசெய்வினையன   வினையினியாகிலும்
இருள்சேரிரு வினைசாடிய
அருளாரத்துறு முனிநாடிய (மயில்)
காரிகையாரிங்கைத் தொரிடமாங்கடை மோகந் - தனிற்
காலந்தனைக்கவிணிற் கழிப்பதுவோநல் விவேகம்
நீரிலெழுந்த   குமிழியெனத்தேகம்
நிலையாதது   தொலையாமுனம்
கொலையாதனி   யலையாதினி (மயில்)
கன்மகம்போற்றுக ரின்பவமபாற்றிய பரனைத் - துதி
சாற்றிடும்பழநி ஸ்வாமிக்குக்கவிசெய் வரனை
அன்பாய்ப்புகழாவி   னன்குடிவாசனை
அருமைப்பொரு   பருகாகிய
கருபாகர   முருகேசனை (மயில்)

---

14) இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

இந்த வேளை நீயே வந்தென்னைக்காப்பாயே (இந்த)

அநுபல்லவி.

விந்தபுயசீலா   விமலவடிவேலா (இந்த)

சரணங்கள்.

அம்பரத்தேதாராய   உம்பர் துயர்தேய
நம்பனருள்சேயே   நன்மதியீவாயே (இந்த)
கானவள்ளிகாயா   கார்த்திகேயநாமா
மானஞானபூமா   வன்மமின்னமாமா (இந்த)
என்னுளைகேளாதா   இன்னுமென்னவாதா
பன்னிருகைநீதா   பழநிச்சாமிநாதா (இந்த)

(15) இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அரஹரசிவ சரவணபவா
அடியனென்முனம் வாரா (அர)

அநுபல்லவி.

வாவாஜெய ஸ்ரீபாமனா
மோஹாநய நீபா (அர)

சரணங்கள்.

ஆரணிசுப தாரணிபரி
பூரணியுமை பாலா
பாலாமறை மொழிகுரு
சீலாவடி வேலா (அர)

பாசபவவி நாசசிவ
பரஞ்சுடர்க்குமா ஈதரா
தேசாமுரு கேசாவள்ளி
நேசாசெந்தில் வாசா (அர)

பழநிச்சாமி கினமும்போற்றும்
பாதாகுக நாதா
நாதாமனே கீதாவிலய
வாதாசுகம் தாதா (அர)

---

(16) இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இந்தவர் மமேமேனைவயா
வழைநகான்பன் னிருகையா (இந்த)

அநுபல்லவி.

சிந்தையிற்றுயர்மிகுந்து தேடிவெகுநாளலைந்து
எந்தையேவரந்தாவென்று வந்தடைந்தனென்றன்பார்த்து ( )

சரணங்கள்.

பத்திசிறிதேனுமில்லாப் பாவியேனானாலுநல்ல
புத்திதரவுன்னையல்லாற் புகலிடமேதுசொல்லாய் (இந்)

[illegible]ன்பமூவிரை நவி[illegible] [illegible]ல்பதமைத் தனையருள்
[illegible]ம்பரப்புகழ்ந்திடும்[illegible]பூதி [illegible]மடிமேலாமே (இந்)
தந்தரமென[illegible]யுண்ண[illegible] [illegible]ந்தரமிசெய்தேவ்[illegible]னமே
[illegible]ந்தசக்[illegible]காலப்பூதி[illegible] [illegible]பதிபதியே (இந்)

---

(17) இராகம்-[illegible]-தாளம்-ஆதி.

பல்லவி.

[illegible]
[illegible] (வாராத)

அநுபல்லவி.

[illegible] [illegible]
[illegible] [illegible]
[illegible] [illegible]
[illegible] [illegible] (வாராத)

சரணங்கள்.

[illegible]பிணிதவிர்த்தனை [illegible]க்கிவினை
[illegible]செய்தருள்[illegible] தண்டாயுதா
[illegible] [illegible]னே—குருக
[illegible] தயாளனே (வாராத)
[illegible] [illegible]முத்துமக
[illegible]டனிக்கா[illegible] [illegible]தயா—தேவா
தேறு[illegible]பொழிற்பழநிந [illegible]
மாறுலயபட [illegible]பாலனே. (வாராத)

---

(18) இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தயவுசெய்தருள் குகனே ஷண்முகனே. (தயவு)

அநுபல்லவி.

தரணிதனில்வரு மருணனெனவிரி
கிரணவுபயநின் சரணதரிசனம் (தயவு)

சரணங்கள்.

புனிதசைவமா னூருமேவ புனைதிருமேவ
பொறைசேர்பரம குருவே
புலமைநிறைபல கலைகளுணர்கவி
வலவர்மகிழ்புகழ் குலவுநலமிகத் (தயவு)

பைஞ்சரவணத் தோதானே பதிதனிலே
பரிந்துனையழைத் தேனே
படருலகில்வரு மிடரகற்றியருட்
கடலுனைப்பரவுந் திடமுறுமறிவைத (தயவு)

மங்களமிகுமயிரா வண்ணமயூரா
வாமதேவகு மாரா
மாசுதவிர்பிர ணநாயகவுடை
னைசநிதியுப மேருசமகிமைகள் (தயவு)

தாமநிறையுந் கநிபய தயாநிதியே
தாசருளத்தின் பதிவே
சரதவிரதமெய் யருகனையபுநிச
சாமிதுதிகருண னையபிமுவரப (தயவு)

---

(19) இராகம்-ஆரபி-தாளம்-ஆதி.

பல்லவி.

வேலவனே நிதம் - விரிசடைப் பணிமுடி
விமல நிசித வடி (வேல)

அநுபல்லவி.

சோலைவளமுடை சூழ்பரங்கிரிவளர்
மேலவனேயெனை யாளவந்தருள்புரி (வேல)

சரணங்கள்.

மாதனைமிசைப்பெரும் பாதகத்திடைமருள்
சாதனைதனில்வரும் வாதனைதவிர்த்தருள் (வேல)

தேவரும்மூவரும் யாவரும்போற்றிசெய்
பூவலம்பொன்னடிச் சேவைதந்தெனைரக்ஷி (வேல)

பக்தியுடன்தினம் பழநிச்சாமிதுதிக்கும்
உத்தமசாதுஜன சித்தமதிற்கதிக்கும் (வேல)

(20) இராகம்-பைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

வரிசேவொ சங் கரிபாலா தெய்வகுஞ்
சரிலோலா பரிசிலா புரிநூலா (வரி)

அநுபல்லவி.

அரிதொழுமேலா னருள்மறைமூலா (வரி)

சரணங்கள்.

ரமாபதிநேசா அமலவிசாகா
ராவள்ளிதழுவுதேகா
கலியோகா நலமோகா (வரி)
சூரசம்ஹாரா கருபாகரா
துரிதகிட பாமயூரா
சுகுமாரா தருவீரா (வரி)
பழமறைநேதா பணிமலைப்பாதா
பழநிஸ்வாமிகிரிநயாதீதா
புறைநாதா வாநீதா (வரி)

(21) இராகம் ஆனந்தபைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

நாடினேன் நானே - நலம் அருள்வாய்
நாடினேன் நானே.

அநுபல்லவி.

கேடிலாதவர் தேடுமாதனமே தினந்தினமே (நாடி)

சரணங்கள்.

வேதசங்கைய யாவையுமுருவாய் விளங்குஜித
பாதபங்கய சேவையேதருவாய்
சீதகங்கை யுலாவுசெஞ்சடை நாதனருளாகரம்பெறு
நீதமங்கைதன் னேயவின்சுதனே ரஞ்சிதனே (நாடி)
சஞ்சிதப்பவ வஞ்சகத்திருளே தவிர்த்துனைத்தினம்
அஞ்சலிக்குநன் னெஞ்செனக்கருளே
மஞ்சுதுஞ்சள கஞ்சிறந்திடு கஞ்சுகத்தன ரஞ்சிதக்க
குஞ்சரிகுற வஞ்சிகாதலனே பூதலந்தனில்

சரணங்கள்.

கோபாபப சூரகோப தீரமோகனு
ஆரநாம தாரனேம யூரவாகனு (வது)
அண்டர்பண்ட ரண்டவாலங் கண்டுபேணியே
உண்டிருண்ட கண்டனீன்ற தண்டபாணியே (வது)
தஞ்சமீ யெனும்பழநி ஸ்வாமிமேலவா
மிஞ்சியேக லங்களருள் வெற்றிவேலவா (வது)

---

(24) இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இணையிலிலா மனமேமுரு
கேசனையதி நேசமாய்த்துதி (இன)

அநுபல்லவி.

தினமுமுன்றனை நல்வழிசேர்த்திட
செம்மைகள்செய்வலியுகதானே (இன)

சரணங்கள்.

கனமுலாம் பழநிமலை வாழ்குருங்
கந்தனை யெய்பெருமானை—வள்ளி
கண்டுணை வண்டுணுந் தேனை
வேலோனைக் கோனை (இன)
ஆதிகங்கைப்புன லாடிநற் சோதிவி
பூதிப் பொடியங்கஞ்சூடி—ஐயன்
ஆறெழுத்துச் செபங்கூடி
கொண் டாடிப் பாடி (இன)
சந்ததமுங்குகன் சிந்தனையோடவன்
றுள்வனசத்துணைவிக்கி—துன்ப
சம்பந்தமென்பதைப்போக்கி
சுகமாக்கித் தேக்கி (இன)
கந்தரத்தூடு பிறந்துமறையுங்
கனருசியாகு மித்தேகம்—இதிர
காதல் கொள்வ தவிவேகம்
ஈதனேக ரனுபோகம் (இன)
வட்டவுலகிடைத் துட்டர்களானலங்
கிட்டுவதோ லவலேசம்—இனி
விட்டுறை நீயவர்நேசம்
உப தேசம் பாசம் (இன)
தண்பணைமார்க்கயன் கோட்டையிற்பழநிச்
சாமிசெய்பாமொழிவாயே—பெருந்
தன்மை யெலாமடைவாயே
மகிழ் வாயே நீயே (இன)

(25) இராகம்-இந்துஸ்தானி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

தேவிதேவனை மகா ருத்ரா நந்தனா
சில் மெளனி சூல பாணி தேவி சாகரீபா
சேயா துய்யா சிந்து காமேடா.
மாதயா அகீதநா ஸவா ஸவா
மாக நாக லோக நாய காதி பெலவா
வாவா ஜூவா வாகை வெலவா.
சாதவேத நாதனே தயா நயா
சார மாய பூர வாக வேலை வீர தயா
தாயா நேயா சந்த ஞலையா.
சிந்தையில் வதிந்திலங் குனே யனே
சேக மோக போக னேபு லோக லோகனே
தேகனே கோனே சிருலோர்னே.
செந்தில்வாழ் வுகந்தயீ சுரா வரா
தினமும் பழநி ஸ்வாமி துதிக்கும் குமர குருபரா
தீரா வீரா சிற்பரா தரா.

(26) இராகம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மங்களம் மங்களம் - ஜெயசுப
மங்களம் மங்களம்.

அநுபல்லவி.

கங்கையம்புலிசூடுஞ் சங்கரன்சுதனெனப்
புங்கமுடனுதித்த .. வெங்கள்ஷண்முகனுக்கு ()

சரணங்கள்.

கீதவேதாகம போதசுகுணகுக
நாதமகாமந்த்ரவி நோதசம்ப்ரமனுக்கு (மங்)
அண்டரண்டங்களுட னெண்டிசையுநொடியில்
மண்டவலம்வருசி கண்டிவாகனனுக்கு (மங்)
வழுத்தும்ஜெயவிமலை வதியுமம்புயனுக்கு
பழநிஸ்வாமிதுதிக்கும் பாதபங்கயனுக்கு
மங்களம் மங்களம் ஜெயசுப
மங்களம் மங்களம்.

ஸ்ரீசரவணபவானந்தச் சண்முகநாதன் சரணமே சரணம்.

கீர்த்தனைகள் முற்றிற்று.

சுபம்.